PONDICHERRY UNIVERSITY
NON - TEACHING STAFF CO-OP. HOUSING SOCIETY Ltd., P. 581
R. Venkataraman Nagar, Kalapet Post, Puducherry - 605 014.

## சுற்றறிக்கை

12.10.2016

நமது கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் சார்பாக இயக்குநர் குழு கூட்டம் 15.09.2016 நடைபெற்றது. இயக்குநர் குழுவின் முடிவின்படி அறிவிக்கப்படுகிறது.

ஸ்மார்ட் சிட்டியில் நமது கனவு இல்லம்
ஒரு சதுர அடி ரூ.2,950/- முன் தொகை ரூ.3 லட்சம்

புதுவை மாநிலம், கூட்டுறவு வீட்டுவசதி இணையம் வழங்கும் புதுவையின் ஸ்மார்ட் சிட்டியின் மத்தியில் மூலகுளம் - பிச்சவீராம்பட்டிணம் ரோடு முத்துப்பிள்ளைபாளையத்தில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் - சிறப்பு அம்சங்களுடன் வழங்கப்படுகிறது.

1. புதுவை அரசு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் நேரிடையாக நமக்கு வழங்குகிறது.

2. பத்திர செலவு இலவசம்

3. 1000 - 1050 சதுர அடிக்குள் ; (அடுக்குமாடி குடியிருப்பு)

4. 12 ¾ % வட்டி

5. 4% வட்டி மானியம் உறுப்பினர்களுக்கு மட்டும்

6. 8 ¾ % வட்டி மட்டும் செலுத்துதல்.

7. முன் தொகை 3 லட்சம் மூன்று தவணையாக கட்ட வேண்டும்.

8. முன் தொகை 1 லட்சம் A/c No.413246888 செலுத்த வேண்டும். ஒரு லட்சம் செலுத்தும் பயனாளிகளுக்கு விண்ணப்பம் படிவத்துடன் முன் பதிவு செய்து கொடுக்கப்படும்.

9. புதுவை அரசு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் லோன் வசதி வழங்க ஏற்பாடு செய்கிறது.

11. உறுப்பினர் அல்லாதோர், ஆசிரியர்கள், ஆபீசர், அலுவலர்கள் தற்காலிக ஊழியர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ள ரூ.1100/- A/c No.413246888 செலுத்த வேண்டும்.

12. பணம் செலுத்திய ரசீதில் புதுவை மாநில கூட்டுறவு வீட்டு வசதி இணையம் அடுக்குமபடி குடியிருப்பு என்று எழுதவும். ரசீது பின்பக்கத்தில் தங்கள் விலாசம், செல் நெ. குறிப்பிடவும்.

13. அடுக்குமாடி குடியிருப்பு பார்க்க புதுவை பல்கலைகழக பேருந்தில் அழைத்துச் செல்லப்படும். விருப்பமுள்ளவர்கள் பெயரை முன் பதிவு செய்து கொள்ளவும். இடம் பார்க்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

...2

புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள அலுவலர்கள், ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் தகவல் அறிய Help Line No.
9345401687, 9894082606
9443622109, 9894865040
9443958058, 8015512276,
9443018304, 9843847884
9600879258

அனைவரும் வருக, நம்பி வாங்க, நம்பிக்கையோடு வாங்க.

இது பொது நலன் கருதி வெளியிடப்படுகிறது.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

அனைத்து உறுப்பினர்களுக்கும் V. Jayamoorthy
தலைவர் மற்றும் இயக்குநர் குழு

[illegible]
N. Arumugam.
(N. [illegible])
Cell: 9894082606

அனுக வேண்டிய முகவரி:
V.ஜெயமூர்த்தி
B.Tech., Section
Exam Wing
Pondicherry University

- 500 சதுர அடி முதல் 850 சதுர அடி வரை UDS வழங்கப்படுகிறது.

To,
The system manager.
Comp. Centre/. with Request to. HOST in the university website, page no: (1, 2, 3, 4)
12.10.16







*. இது ஒரு பொது நலம் கருதி வெளியிடப்படுகிறது.

## 'ஸ்மார்ட் சிட்டி' என்றால் என்ன?

உலகத் தரம் வாய்ந்த தொழில் நுட்பத்துடன், அனைத்து கட்டமைப்பு வசதிகள் அமைந்த நகரம், ஸ்மார்ட் சிட்டி எனப் படும். இந்த நகர மக்களின் வாழ்க்கைத் தரம், சர்வதேச நகரங்களுடன் ஒப்பிடும் வகையில் இருக்கும்.

சுத்தமான குடிநீர், தடையற்ற மின்சாரம், பளபளக்கும் சாலைகள், மின்னல் வேக இணைய வசதி, தானியங்கி கழிவு அகற்றல் நடைமுறை, சிறப்பான பொது போக்குவரத்து, 'டிஜிட்டல்' மயமான, பொது சேவைகள், குறைந்த விலையில் வீடு ஆகியவை, ஸ்மார்ட் சிட்டியின் கட்டமைப்பு அம்சங்கள்.

## தேர்ந்தெடுக்கும் முறை

ஸ்மார்ட் சிட்டி திட்டத்துக்கான நகரங்கள், இரு கட்ட நடை முறை மூலம் தேர்வு செய்யப்படுகின்றன. முதல் கட்டமாக, மாநில அரசுகள், ஸ்மார்ட் சிட்டியாக உருவெடுக்கத்தக்க நக ரங்களை தேர்வு செய்து, மத்திய அரசுக்கு பட்டியலை அனுப்பும். அனைத்து மாநிலங்களும் அனுப்பும் பட்டியலில் இடம்பெறும் நகரங்கள், அவற்றின் தற்போதைய கட்டமைப்பு வசதிகளை பொறுத்து, இரண்டாவது கட்டத் தேர்வில் பங்கேற்கும்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்துக்கு, மத்திய அரசு, தன் பங்காக, ஐந்து ஆண்டுகளுக்கு, 48 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கும். தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு நகரத்துக்கும், ஆண்டுக்கு, 100 கோடி ரூபாய் வீதம் செலவிடப்படும். மத்திய அரசு வழங்கும் தொகைக்கு நிகராக, அனைத்து மாநில அரசுகளும் சேர்ந்து முதலீடு செய்யும்.

## அடுத்தாண்டில் 40 நகரங்கள்

மத்திய அரசின் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், 100 நக ரங்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளன. இதுவரை, 60 நகரங்கள் தேர்வாகி உள்ளன. மீதமுள்ள, 40 நகரங்களை தேர்வு செய்யும் பணி, அடுத்தாண்டு, ஜனவரியில் துவங்கும். வரும், 2022க்குள், இந்தியாவில், 100 ஸ்மார்ட் சிட்டிகள் உருவாக்கப்பட்டு இருக்கும்.